# Form.No.53
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No.98 of 2018
Priliminary Register
Sessions

Prosecutuion PW5
Depostitions of Prosecution witness for Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | விஜயகாந்த் |
| Husband /Father name | : | கொளஞ்சி |
| Village | : | பழஞ்சநல்லூர் |
| Taluk | : | |
| Calling | : | PW5 (LW6 ) |
| Religion | : | |
| Age | : | 35 |

**1, 4, 5, 7** எதிரிகள் ஆஜர். **2, 3** எதிரிகள் ஆஜரில்லை. அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். **1** முதல் **5** மற்றும் **7** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரிவு **355** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. **6** து எதிரி இறப்பு. சாட்சி காட்டுமன்னார்கோயில் காவல்நிலைய பெண் தலைமை காவலர் திருமதி. ஆஷா **1268 WHC** என்பவரால் அடையாளம் காட்டப்பட்டார்.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 25th day of May 2026

முதல் விசாரணை

நான் பழஞ்நல்லூரில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சதீஷ்குமார் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை நான் வயலில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது வாத்தியார் முருகப்பன் என்பவரின் இடத்திற்கு வந்து விசாரித்தது சம்பந்தமாக கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். அந்த தேதி, மாதம் நினைவில்லை. விசாரித்து போர் போட்ட இடத்தை பார்த்தார்கள். அவர்கள் வந்து சென்றது சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் உள்ள

முருகப்பன் என்பவரின் இடம் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு சரியாக உள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர். பார்வை மகசரில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்.

**1** முதல் **5** மற்றும் **7** எதிரிகள் **தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை வேலைக்கு முருகப்பன் அழைத்தாரா என்றால் சரிதான். அந்த போர் குழியை நிரப்ப தான் என்னை அழைத்தார் என்றாலும் நான் தான் மண் அடித்தேன் என்றாலும் சரிதான். அவர் சொன்னதன் அடிப்படையில் தான் அந்த போர் குழியை மூடினேன் என்றால் சரிதான். என்னை விசாரித்தவர்கள் போலீசாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் சீருடையில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் எழுதப்பட்ட தாளில் கையொப்பம் பெறப்பட்டதா வெற்றுத்தாளில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் எழுதிய தாளில் தான் கையொப்பம் பெற்றனர். அதில் எழுதியிருந்த விபரத்தை எனக்கு படித்துக் காட்டவில்லை என்றால் சரிதான். என்னிடம் கேட்டு குறித்தனரா அவர்களாக எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் அவர்கள் எழுதிவிட்டு அவர்கள் வந்ததற்காக கையொப்பம் செய்யுமாறு கேட்டனர். அந்த இடத்தை பார்வையிட வந்தபோது கவிதா மற்றும் முருகப்பன் வந்தார்களா என்றால் இல்லை. நான் முருகப்பன் என்பவர் இடத்தில் தான் வேலை செய்தேன் என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை : இல்லை

Signature of witness

**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No.98 of 2018
Priliminary Register
Sessions

Depostitions of Prosecution witness for Prosectuion PW4
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | மதியழகன் |
| Husband /Father name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | வெண்ணங்குழி |
| Taluk | : | |
| Calling | : | PW4 (LW3 ) |
| Religion | : | |
| Age | : | 71 |

**1, 4, 5, 7** எதிரிகள் ஆஜர். **2, 3** எதிரிகள் ஆஜரில்லை**.** அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர்**. 1** முதல் **5** மற்றும் **7** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**.** பிரிவு **355** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 6** து எதிரி இறப்பு**.** சாட்சி காட்டுமன்னார்கோயில் காவல்நிலைய பெண் தலைமை காவலர் திருமதி**.** ஆஷா **1268 WHC** என்பவரால் அடையாளம் காட்டப்பட்டார்**.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 25th day of May 2026

முதல் விசாரணை

நான் வெண்ணங்குழியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் கவிதா, முருகப்பன், செந்தில்குமார் ஆகியோரை தெரியும். கார்த்திகேயன், கோபாலகிருஷ்ணன் என்பவர்களை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். என் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். ராஜராஜன், செல்வராஜ், அய்யப்பன் ஆகியோர்களை தெரியாது. கவிதா என்பவர் என்ன புகார் அளித்தார் என்று தெரியாது. கவிதாவிற்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. )**

**அரசுதரப்பு குறுக்கு விசாரணை**

28.09.2017 அன்று கவிதா என்பவர் வயலில் அவர் போர் போட்டுக் கொண்டிருந்தபோது போர் போடக்கூடாது என்று எதிரிகள் அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், நானும் செந்தில்குமார் என்பவரும் சென்று தடுத்தோம் என்றும் போலீசார் விசாரிக்க வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் தான் இருந்தேன் என்றாலும் நான் எதிரிகளுக்கு ஆதரவாக போலீசார் விசாரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1** முதல் **5** மற்றும் **7** எதிரிகள் **தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் அனைவரும் கோவிந்தசாமி என்பவரின் மகன்கள் என்றால் சரிதான். முருகப்பன் என்பவர் 1வது எதிரியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர்களுக்குள் சொத்து பிரச்சனை உள்ளதா என்றால் தெரியாது. கவிதா என்பவர் ஒரு இடத்தில் போர்போட்டதாக கூறியுள்ள நிலையில் அந்த இடம் எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடத்தை கவிதா யாரிடம் இருந்து வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த இடத்தை கவிதா வாங்குவதற்கு முன்பு 1வது எதிரி வாங்குவதற்காக அப்பாயி என்ற ஒருவரிடம் ஒப்பந்தம் போட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1995ல் பழஞ்சநல்லூர் கிராமத்தில் ஒரு பஞ்சாயத்து நடந்த விபரம் தெரியுமா என்றால் நினைவில்லை. (அரசுதரப்பில் மேற்படி கேள்வியானது இந்த வழக்கிற்கும் சாட்சியின் வாக்குமூலத்திற்கும் தொடர்பில்லாதது என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் அரசுதரப்பில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது. ஆட்சேபனை குறித்து தீர்ப்பில் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்)

கவிதா வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் அந்த ஆவணத்தில் நானும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதே தேதியில் அப்பாயி என்பவரின் வாரிசுகள் எனக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார்களா என்றால் அதற்கு முன்பே கொடுத்தார்கள். அந்த ஆவணம் 22.06.2005 தேதியில் எனது பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் தேதி நினைவில்லை. அசல் வழக்கு எண்.109/2017 என்ற வழக்கில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் நினைவில்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை : இல்லை

Signature of witness